Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 25 (10 - 11 - 1992) செவ்வாய்க்கிழமை ஓசை 266

## மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 2 லட்சம் தமிழர் இடம் பெயர்வு

''மேற்கைரோப்பிய நாடுகளில் சுமார் இரண்டு லட்சத்து பத்தாயிரம் இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ளனர். இவர்களில் பலர் பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். வேறும் பலர் அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர்'' இவ்வாறு நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கா. குகபாலன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறும்போது பிரித்தானியாவில் சுமார் 38 000 தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் 15,000 முதல் 16,000 வரை (4 ஆம் பக்கம் பார்க்க)

# உகனையில் 'ஹெலி' சுட்டு வீழ்த்தப்பட்டது

# மட்டு. காடுகளில் அகோரக் குண்டுவீச்சு

## வடகிழக்கு உண்மை நிலை அரசுதெளிவுபடுத்த வேண்டும்

**- ரிச்சர்ட்பத்திராண**

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளின் இப்போதைய உண்மையான நிலையை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் பிரதம கொறடாவான ரிச்சர்ட் பத்திராண பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில் விடுதலைப்புலிகள் சுதந்திரமான முறையில் ஆயுதங்களோடு வாகனங்களில் நடமாடுவதாகக் கூறப்படுகிறது. இந்தநிலைமை தான் இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்ட வேளையிலும் காணப்பட்டது. இந்த யுத்தத்தை தொடர்வதற்காக பில்லியன் கணக்கில் அரசு செலவிட்டு வருகிறது. எனவே உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இறக்கும் இராணுவத்தினருக்கான நட்ட ஈட்டினை அவரது குடும்ப உறவினருக்கு வழங்கப்படுவதற்கு போதிய நிதி இல்லை என்ற காரணம் கூறி இரண்டு மூன்று ஆண்டுகள் இழுத்தடிக்கப்படுகிறது. ஆனால் கிரிக்கெட் விளையாடுவதற்கும் இரவு தமாஷாக்களுக்கும் பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டு செலவிடப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

## ராணுவ தலைமைப் பீடத்தின் சர்ச்சைகள் நீக்கப்படவேண்டும்

**- டிக்சன் பெரேரா**

(கொழும்பு)

இராணுவத் தலைமைப் பீடத்தினுள் சர்ச்சைகள் இருக்குமாயின் உடனடியாக அது நீக்கப்பட வேண்டும் என்று சுதந்திரக்கட்சி எம். பி. யான டிக்சன் பெரேரா பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் ஆயிரக்கணக்கில் இரா... திற்கு ஒருதலைமை இருந்தால் தான் இராணுவத்தினருக்கு வலிமை ஏற்பட முடியும் என்றும் தெரிவித்தார். அத்துடன் போரைத்தொடரும் வகையில் இராணுவத்தினருக்கு உற்சாகமூட்டப்பட வேண்டும் என்றும், வேலைவாய்ப்புத் தேடி இராணுவத்தில் சேருவோர்... யைக் குறைக்கலாமெனவும், குறிப்பிட்டார் இராணுவத்திலிருந்து விலகுவோரைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், நெருக்கடியான இந்த வேளையில் மக்கள் தொடர்பு சாதனங்கள் இராணுவத்தினருக்கு...

## 'ஜயபார' இராணுவ நடவடிக்கை இரண்டாம் நாளாக தொடர்கிறது

நேற்று மட்டக்களப்பு காட்டுப் பகுதியில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சம்பவத்தில் ஒரு விமானப்படை உயர் அதிகாரி கொல்லப்பட்டதாகவும் இரு அதிகாரிகள் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தொடர்ந்தும் இரண்டாவது நாளாக மட்டக்களப்பு மாவட்டக் காட்டுப் பகுதியிலும் அதை அண்டியுள்ள கிராமங்கள் மீதும் அகோர குண்டுவீச்சு தாக்குதலை நடத்தி வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன இவ் விமானக் குண்டுவீச்சை தொடர்ந்து கிராமங்களில் இருந்து பெருமளவில் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு உகனைக் காட்டுப்பகுதியில் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக தாக்குதலிலும், வேவுவேலையிலும் ஈடுபட்டிருந்த ஹெலிகப்டரே தாக்குதலுக்கு உள்ளானதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பிக்கப்பட்ட ''ஜயபார'' இராணுவ நடவடிக்கைதொடர்ந்து நடைபெறுவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இத் தாக்குதல்களுக்கு ஹெலிகொப்டர்களும் பயன் படுத்தப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந் நடவடிக்கைக்கு கிழக்கு பிரதேச தளபதி பிரிகேடியர் லக்கி அல்கம, பிரிகேடியர் ஜனகபெரேரா, பிரிகேடியர் மொசான் குணவர்த்தன ஆகியோர் பொறுப்பாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு ...

### அதிகாரிகள் விரைவு; கருத்துக்கூற மறுப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்று விடுதலைப் புலிகளால் உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் குறித்து ... தது அத்துடன் அந்த உலங்குவானூர்தி புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கலாம் என்பதற்கானசாத்தியங்களை மறுப்பதற்கில்லை என அது மேலும் தெரிவித்தது.

தமிழ்க் குழு ஒன்றும் உதவி புரிந்து வருவதாக வெரித்தாஸ்வானொலி தெரிவித்த.

காட்டுப்பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக அகோர விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவப்பதாகவும் இராணுவ வட்டாரங்களில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றியோ தாக்குதல் பற்றியோ எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை எனவும் மட்டக்களப்பு நகரங்களில் மக்கள் நடமாட்டம் வழமை போல் காணப்படுவதாகவும் அவ் வானொலி மேலும் தெரிவித்தது.

குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் உயிர் துறந்திருப்பது நாட்டைப் பாதுகாக்கவே என்றும், இராணுவத் கமூட்டப்பட வேண்டும் என்றும், வேலைவாய்ப்புத் தேடி இராணுவத்தில் சேருவோர் தொகையை கட்டுப்படுத்துவதன் மூலம் இராணுவத்திலிருந்து தப்பிஓடுவோர் தொகையில் மக்கள் தொடர்பு சாதனங்கள் இராணுவத்தினருக்கு உற்சாகமூட்டும் செய்திகளுக்கு முதலிடம் தர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

# வட - கிழக்கு இணையா தீர்வு ஏற்றுக்கொள்ள ரெலோ தயாராம்

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிந்திருக்கும் நிலையிலான தீர்வுத்திட்டமொன்றை ஏற்றுக்கொள்ள தாம் தயாராக இருப்பதாக ரெலோ குழுவின் பேச்சாளர் ஒருவர் கொழும்பு பத்திரிகையொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இயங்கிவரும் ஏழு தமிழ்க்குழுக்கள் வடக்கு கிழக்கு இணையாத தீர்வு எதனையும் தாம் ஏற்கமாட்டோம் என முன்னர் தெரிவித்து வந்தனர். இவ் ஏழு தமிழ்க் குழுக்களுள் ரெலோ குழுவும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான தீர்வொன்றை ஏற்றுக்கொள்ள ரெலோ குழுவினர் முன்வந்திருப்பது இதுவே முதற்தடவை என அகில இந்திய வானொலி தெரிவித்தது.

# மண்டைதீவு கடற்பரப்பில் கடற்படையால்இளைஞர் கைது

(நல்லூர்)

மண்டைதீவுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் சிறிலங்கா கடற்படையினரால் கைதானார். இருவர் தப்பி கரைசேர்ந்தனர் நேற்று முன்தினம் இரவு 11-00 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அன்ரன் அப்புக்குட்டி [வயது 15] என்றஇளைஞனே கடற்படையினரால் கைதானவர் ஆவார் யேக்கப் பத்திக்குமார் [வயது 28], யேக்கப் குட்டித்தம்பி [வயது 16] ஆகிய இருவருமே தப்பி வந்தவர்கள் ஆவர்.

இச் சம்பவம் தொடர்பாக யேக்கப் பத்திக்குமார்தெரிவிக்கையில், கல்முனைக்கும் மண்டைதீவுக்கும் இடையிலுள்ள கடலில் நாங்கள் மூவரும் சிறியவள்ளத்தில் டிஸ்கோ வலைமூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்தோம் அச்சமயம் மண்டை தீவிலிருந்து இரு விசைப்படகுகள் எம்மை நோக்கி வந்தன. அதில் ஒன்று எமக்கு அருகில் வந்ததும் நாங்கள் கடலில் பாய்ந்து நீந்தினோம். அன்ரன் வெள்ளைநிற போசாக் கட்டையைக் கொண்டு நீந்திய போது அதனைக்கண்ட கடற்படையினர். அவரை பிடித்தனர். நானும் எனது சகோதரனும் படகின் மறைவில் நீந்தி சிறுத்தீவுக் கரையை வந்தடைந்தோம். அச்சமயம் எம்மை நோக்கி கடற்படையினர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர் என்றார்.

இவர்கள் தமது தொழில் உபகரணங்களையும், படகையும், பிடித்த மீன்களையும் கைவிட்டு விட்டு நீந்திக்கரை வந்து சேர்ந்தனர். [17], [21]

## மீனவர் உபகரணங்கள் கடற்படையால் பறிமுதல்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கடற்படையினரைக் கண்டு கடலில் குதித்து தப்பி வந்துள்ளனர். நேற்று அதிகாலை 3 00 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; சற்கோட்டைப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் ஒளியைப் பாய்ச்சியவண்ணம் விரைந்து வந்தனர். இதனைக் கண்ட எஸ்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த ராணுவ, விமானப்படை உயரதிகாரிகள் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன

இச்சம்பவம் குறித்து அந்த அதிகாரிகளிடம் வினாவிய போது இதுகுறித்து கருத்துக் கூற மறுத்துவிட்டனர் என பி. பி. ஸி. நேற்று அறிவித்

## தபால் பொதிகள் அனுப்பப்பட்டன

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்கி முடித்த 'குமண' கப்பல் நேற்று மாலை கொழும்புக்கு புறப்பட்டது இக்கப்பலில் தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

இன்று திருக்கோணமலையிலிருந்து மாவுடன் 'குமாரி' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும்.

இதேவேளை இம் மாதம் நடுப்பகுதியில் 'அமேசன்' கப்பலில் யாழ் மாவட்டத்திற்கு விதை உருளைக் கிழங்கும் மண்ணெண்ணையும் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ)

## வயிற்றோட்டத்தால் குழந்தை மரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த நான்கு மாதக் கைக்குழந்தையொன்று கடந்த வாரம் வயிற்றோட்ட நோயினால் மரணமடைந்தது.

கனகசபானந்தன் - அஜிதா 4 மாதக் கைக்குழந்தையே வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டு மரணமானது.

வயிற்றோட்ட நோய்க்கு இப்பகுதியில் சிறு குழந்தைகளே அதிகமாக இறக்க நேரிடுவது குறிப்பிடத்தக்கது. (யோ)

என்பதற்கானசாத்தியங்களை மறுப்பதற்கில்லை என அது மேலும் தெரிவித்தது.

தல் நடவடிக்கைகளுக்கு ரெலோஇயக்கமும் இன்னோர்

அவ் வானொலி மேலும் தெரிவித்தது.

# ஆக்கபூர்வமான சமரசமுயற்சி அரசே மேற்கொள்ள வேண்டும்

## குவேக்கர்ஸ் சமாதான குழுவிடம் விடுதலைப் புலிகள் வலியுறுத்து

"இனப்பிரச்சினைக்கான ஆக்கபூர்வமான சமரச முயற்சிகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்" இவ்வாறு நேற்று மாலை குவேக்கர்ஸ் சமாதானக் குழுவினைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய விடுதலைப் புலிகளின் பிரதிநிதி வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

மேலும் "விடுதலைப்புலிகள் சமாதான தீர்வில் அக்கறையுடனேயே இருப்பதாகவும், ஆனால், அரசாங்கம்தான் தீர்வில் அசட்டையாக உள்ளது" எனவும் குறிப்பிட்டதாகத் தெரியவருகின்றது.

விடுதலைப்புலிகளுக்கும் குவேக்கர்ஸ் குழுவினருக்கும் இடையிலான இரண்டாவது சந்திப்பு நேற்றுமாலை நடைபெற்றதாக அறியவருகின்றது

இதேவேளை, யாழ் வந்துள்ள குவேக்கர்ஸ் குழுவினர் நாளை கொழும்பு திரும்பவுள்ளனர் எனவும் தெரியவருகிறது

யாழ் வந்துள்ள இக்குழுவில் என் இராமச்சந்திரமூர்த்தி, பொப்நிட்காட், மீசெல் ஆகியோர் உள்ளனர்.

## ஆலங்கேணி நோக்கி பீரங்கி தாக்குதல்

### கிளாலிப் பாதை தடைப்பட்டது

(கேரதீவு)

ஆலங்கேணி பகுதியை நோக்கிசிறிலங்காகடற்படைப் படகுகள் நேற்று முன்தினம் இரவு 9 30 மணியளவில் அகோர பீரங்கித் தாக்குதல்களை நடாத்தின இத்தாக்குதலினால் ஆலங்கேணி கிளாலிப் பாதையில் பயணம் செய்ய தங்கியிருந்த பிரயாணிகள் சிதறி ஓடினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஞாயிறு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று இரவு 7.00 மணிக்கு நீக்கப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்தது.

வாசகர்களே!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த எமது அடுத்த தொகுதி புத்தகங்கள் விற்பனைக்கு வந்து விட்டன.

நாடவேண்டிய இடம்

"தமிழ்த்தாய் புத்தகசாலை"

191 மின்சார நிலைய வீதி,

(பஸ்நிலைய அருகாமை)

யாழ்ப்பாணம்

(சி-5384)

வீட்டிற்கு வீடு மரம் நாட்டினால்
நாட்டுக்கு மழைநீர் நாளுமுண்டு

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்குண்டு

கறுப்பு + பிறவுண்சேவல்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு தொகையாக பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு விசேட கழிவுண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3220)

### விற்பனைக்கு

Prima + Babira Hy—Line Christombu. பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்கம்பு ஆகிய இன பேட்டு குஞ்சுகள் + புறோயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும் மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் [3221]

### பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில் தினசரி; 4 பி. ப. — 6 பி. ப ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப. (3216)

### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவநெறி (ஆண்டு II) துரித மீட்டலுக்கான வினா விடை ஆக்கம்: க. சந்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5356)

### தவறிவிட்டது

07-11-92 அன்றுஇரவு நவாலியில் இருந்து புத்தூருக்கு வரும் வழியில் மோட்டார் சயிக்கிள் பதிவுப் புத்தகம், 'ரைக்ஸ்', காப்புறுதிப் படிவம் இன்னும் சில பொருட்களும் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3609)

### தவறிவிட்டது

கு. சசிவர்ணன் (டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்) என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய சாம்பல் நிற பிரயாணப் பை ஒன்று ஆலங்கேணியில் 25-10-92 தீபாவளி அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3615)

### அநுமதிப் பரீட்சை ஆண்டு 6

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அநுமதிப் பரீட்சை 10-11-92 செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்கள் வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3608)

### ''சுவடுகள்''

இயல்வாணன் எழுதிய இந்த நாவலில்.. மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது! இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது! சூரியனைத் தேடி ஒரு சுதந்திரப் பூ மலர்கிறது. (3585)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி-5152)

### தற்கொலை

(வவுனியா)

குடும்பத் தகராறு காரணமாக இளம் குடும்பப் பெண் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த 6 ஆம் திகதி சேமமடு முதலாம் படிவத்தைச் சேர்ந்த செல்வகுமாரி அமுதா (வயது 23) என்ற இந்த இளம் குடும்பப் பெண் கணவரோடு ஏற்பட்ட தகராறு காரணமாக தற்கொலை செய்து கொண்டார்.

இவர் இரு பிள்ளைகளின் தாயார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

### அலுவலகம் திறப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியிலுள்ள தென்புலோலி, சென் யோசேப் சன சமூக நிலையத்திற்கும் விளையாட்டுக் கழகத்திற்குமான புதிய அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. (25)

# கிழக்கு ஆசியாவில் அணு ஆயுதப் பரவல்; சீனாவின் நிலை குறித்து அமெரிக்கா கவலை

சீனா, மூன்றாம் உலகநாடுகளான வடகொரியா, ஈரான், அல்ஜீரியா, சிரியா, பாகிஸ்தான போன்ற நாடுகளுக்கு அணு உற்பத்தி பற்றிய தொழில் நுட்பங்களை விற்பது குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது. இதனால் சீனா, தாய்வான் ஆகிய நாடுகளின் அணு உற்பத்தி தொடர்பான முயற்சிகளுக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளது

எதிரிகளாக இருந்த சீனாவும் தாய்வானும் கடந்த வருடம் ஒன்று சேர்ந்தன. அணு சக்தி முயற்சியில் ஈடுபடுவதற்குத் தேவையான முக்கிய நிலம் தாய்வானில் உள்ளது. ஆனால் இம்முயற்சிகள் அமெரிக்காவின் தடையுத்தரவினால் பாதிக்கப்பட்டுள்ளது.

தாய்வானில் உள்ள வலு நிலையங்களின் வேகத்தைப் பார்த்தும், சீனா கதிர் வீச்சுகளிலிருந்து புளூட்டோனியத்தைப் பெற முயற்சிக்கிறது என்றுதான் அமெரிக்கா கவலை கொள்கிறது

ஒன்றிணைந்த இரண்டு சீனாக்களுக்கு இடையில் உருவான முயற்சியினால் சீனா பெருமளவு அந்நிய செலாவணியையும், தாய்வான் நிபுணர்களையும் கொண்டு தனது சொந்த அணு உற்பத்தியை கொண்டு நடத்த முடியும் என்றும், அமெரிக்கா எதிர்பார்க்கின்றது

இது குறித்து தாய்வான் வலு கம்பனியின் பொதுமுகாமையாளர் சாங்- ஸி- மின் விபரிக்கையில் ''பீக்கிங் அணுவாயுத உற்பத்தியை அதிகரித்து மூன்றாம் உலக நாடுகளுக்கும், நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளுக்கும்விற்பனை செய்து விடுமோ என்று அமெரிக்கா நினைக்கிறது'' என்றும்,

''நாங்கள் கதிரியக அணு உற்பத்திக் கழிவுகளை சீனாவின் தென் கிழக்குப் பகுதியில் பீக்கிங்கிற்கு அப்பால் ஒதுக்குகிறோம்'' என்றும் குறிப்பிட்டார்.

இதே நேரம் அணு உற்பத்திக்குசிறந்த இடமாக ஆசியா விளங்குகிறது என்ற அமெரிக்காவின் நினைப்பு சரியானது என்று சில அவதானிகள் கருதுகின்றனர்.

சீனா கடந்த யூலை மாதத்தில் ஸின்ஜியாங் பாலவனத்தில் நிலத்தின் கீழ் நடத்திய அணுப்பரிசோதனையே அமெரிக்காவிற்கு கூடுதலான அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சீனாவில் மட்டுமல்லாது ஆசியாவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் உள்ள அணுவாயுத கருவிகள் பற்றி அமெரிக்கா கவனத்தில் எடுத்துள்ளது வட கொரியாவில் சீனாவுக்கு காணப்படும் செல்வாக்குக் குறித்தும் அமெரிக்கா கவலை கொண்டுள்ளது. வட கொரிய - சீனா உறவுகள் அணு குண்டு உற்பத்திக்கான முன்னேற்றத்திற்கு வழிவகுத்து விடுமோ என்றும் நினைக்கின்றது.

அமெரிக்க உளவு அறிக்கையின்படி யாங்கில் போதுமான புளூட்டோனியம் உற்பத்தி செய்யப்படுகிறது இது ஒரு வருடத்திற்கு ஒரு குண்டு செய்வதற்குப் போதுமானதாகும்

வடகொரியாவில் சீனாவின் அணு உற்பத்திச் செயற்பாடுகள் ஓரளவுக்கு இருக்கின்ற அதேவேளை பியொஜிங்கில் குண்டு தயாரிப்பதற்கு தேவையான புளூட்டோனியம் இன்னும் அதிக தேவையுடையதாகும்

கொரியாவை சுற்றியபிராந்தியங்களில் அணு உற்பத்தியின் வளர்ச்சியை தடை செய்வது பற்றி அமெரிக்கா சீனாவுக்கு விளக்கியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க படைகள் ஆசிய பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ளன. ஆனால் இவ்வருட இறுதியில் பிலிப்பைன்சில் இருந்து இவை வெளியேறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே ஆசியாவில் தனது கவனிப்பு குறைந்து வரும் நிலையில் சீனா அணு உற்பத்தியில் அக்கறை காட்டுகின்றதுஎன்பதை ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கிறது

இந்த நிலையில் ''அணுவாயுதபரம்பல் தவிர்ப்பு உடன்படிக்கை'' மீது சீனா உண்மையான ஆதரவை வெளிப்படுத்துமா என்பதையே வாஷிங்டன் தற்போது கவனித்துக் கொண்டு இருக்கிறது

# ஒழுக்கத்தை காக்கத் தவறின் எயிட்சால் பாதிப்பு ஏற்படலாம்

- ஏ. கே. ரணசிங்க

(கொழும்பு)

இலங்கை மக்கள் தமது மதக்கோட்பாடுகளுக்கு அமைய ஒழுக்கத்துடன் வாழக்கற்றுக்கொள்ளத் தவறினால் மக்களை எயிட்ஸ் நோயில் இருந்து பாதுகாப்பதற்கு பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டி வரும்,

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் எயிட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கொன்றினை கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடாத்திய போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ ஜே ரணசிங்கா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; இந்த எயிட்ஸ் ஆட்கொல்லி நோய்க்கான மருந்தினை உலகில் எந்த ஒரு நாடுமே கண்டுபிடிக்கவில்லை எமது இலங்கை மக்கள் ஒழுக்கப் பண்பாடுகளை பேணிக் காப்பதன் மூலம் இந்நோயில் இருந்து பாதுகாப்புப் பெறலாம் எனத் தெரிவித்ததுடன் செஞ்சிலுவைசங்கம் இந்நோய் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறும் நடவடிக்கைகளை பாராட்டியதுடன் மகளிர் சங்கம், சனசமூக அபிவிருத்தி சங்கங்கள், இளைஞர் ஸ்தாபனங்களூடாக கிராமங்கள்' பாடசாலைகளுக்கு எயிட்ஸ் நோய் பற்றி விளக்கிக் கூறும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி உரையாற்றியுள்ளார்.

## தோட்டத் தொழிலாளருக்கும் சம்பள உயர்வு தேவை

(கொழும்பு)

இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கும் சம்பள அதிகரிப்பு தோட்டத் தொழிலாளருக்கும் கிடைக்க நடவடிக்கைஎடுக்கப்படும் என கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத் தோட்டங்களை நிர்வகிக்கும் 22 தனியார் தோட்டக்கம்பனிகளும் அரசாங்கம் வழங்கும் சம்பள அதிகரிப்பைத் தாமும் வழங்குவதற்கு முன்வந்துள்ளன. ஆனால் இவர்களது வாழ்க்கைச்செலவு சரியான தரத்தில் நிலைநிறுத்தப்பட வேண்டுமென நிதிச் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## வேலை வாய்ப்பு மோசடி; பாக். பிரஜை கைது

(கொழும்பு)

மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி மட்டக்களப்பில் 36 இளைஞர்களிடம் பெருந்தொகைப் பணத்தை வசூலித்தான் பிஜையொருவர் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ் மோசடி பற்றி விசாரணைகள் நடைபெற்றுவருகின்

## நான்கு மாதம் உதவிப்பணம் இல்லை

## கிராமசேவை உத்தியோகத்தர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவம் பெறக்கூடாது

(நல்லூர்)

கிராம சேவை உத்தியோகத்தர்களாக கடமையாற்றுபவர்கள் கூட்டுறவுச் சங்கத்திலோ அன்றி இளைச்சங்கங்களிலோ உறுப்பினர்களாக இருக்கக் கூடாது என யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு லிங்கநாதன் சகல யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்தியுள்ளார். இவ்வாறு யாராவது உறுப்பினர்களாக இருந்தால் அவர்களை உடன் நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் மேலும் பணித்துள்ளார்.

வடகிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் இவர்களை பலநோக்குக்கூட்டுறவுச் சங்க உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குமாறு தம்மை பணித்துள்ளார் எனவும் அவர் மேலும் இக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## மல்லிகாவின் குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது

- லலித் அத்துலத் முதலி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிய முக்கிய உறுப்பினரான மல்லிகா டி.மெல் சுமத்தியிருக்கும். குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் ஆதாரமற்றவை என்று முன்னாள் அமைச்சரான லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; தெவி நுவர மற்றும் புளத்சிங்கள தேர்தல் தொகுதிகளுக்கு தானோ தனது கட்சியினரோ இன்னமும் அமைப்பாளர்களை நியமிக்கவில்லை இந் குறைகூறுவது சந்தேகத்தை தோற்றுவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் தாம் அண்மையில் தாக்கப்பட்டதற்கும் திருமதி மல்லிகா டி மெல்லுக்கும் தொடர்பு இருப்பதாகவும் கூறினார்.

மேலும் 1977-ன் பின்னர் நடந்த எந்தஒரு தேர்தலிலும் ரொனி டி மெல் வெற்றி பெறவில்லை என்றும் அதனால் அவரது வருகையோ அல்லது மல்லிகா கட்சியை விட்டு வெளியேறியமையோ

## குடும்பப் பூசலைக் கைவிருக

## குடும்பப் பூசலைக் கைவிடுக சு.த.கட்சியினர் கோரிக்கை

(கொழும்பு)

குடும்பப் பூசலைக் கைவிடுங்கள். அல்லது நம் கட்சியில் இருந்து விலகுவோம் என கற்பிட்டிய சுதந்திரக் கட்சிக் கிளை அங்கத்தவர்கள் பண்டாரநாயக்கா குடும்பத்தினருக்கு காலக்கெடு விதித்துள்ளனர்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மகன் அனுரா, மகள் சந்திரிகா ஆகிய மூவரும் ஒருமாதத்திற்குள் தமக்கிடையே உள்ள முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளத் தவறினால் கற்பிட்டிய சுதந்திரக் கட்சிக் கிளை அங்கத்தவர்கள் அனைவரும் ராஜினாமாச் செய்வார்கள் என்று அக்கட்சிக் கிளையினால் பண்டாரநாயக்கா குடும்பத்தினருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இலகு கடன் திட்டம் சர்வோதயம் அறிமுகம்

இராணுவ அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இலகு கடன் திட்டமொன்றை சர்வோதய யாழ்ப்பாண கிளை அறிமுகம் செய்துள்ளது. இந்த கடன் திட்டத்தின் கீழ் அம்பனை, வடமராட்சி, சாவகச்சேரி பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குஇத்திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளதாக சர்வோதய உயர் அதிகாரி தெரிவித்தார்.

இப்பகுதியில் சுமார் 125-க்கு மேற்பட்டோருக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுவதாகவும், மேலும் பலருக்கு கடன்களை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுவதாகவும், இத்திட்டத்தில் எந்த ஒரு பிணையும் இன்றி கடன்பெறலாம் என்று, தமது பாலர் பாடசாலை வாசிகசாலை அங்கத்தவர் ஊடாக பணம் வழங்கப்படும் என்றும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

பலாங்கொடை

## இல. வங்கி கிளையில் கொள்ளை இரு இளைஞர் கைது

(கொழும்பு)

இலங்கை வங்கி பலாங்கொடை கிளையில் இருந்து சுமார் 50 இலட்சம் ரூபாவை துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் சென்ற இரு நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளையைத் தொடர்ந்து பலாங்கொடை இரத்தினபுரிப் பகுதிகளில் பொலிசார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதனைத் தொடர்ந்து ஒப்பநாயக்காவில் வைத்து இவ் இரு சந்தேக நபர்களை கைதுசெய்தபோது கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் 35 இலட்சம் ரூபா இவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு கரன்ஸிகளும் இவர்களிடம் இருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தேக நபர்கள் மகரகம பள்ளிப்படடியைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களில் ஒருவர் முன்னாள் கடற்படை வீரர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ... இல்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ளில் புற்றுநோய், காசநோய் தொழு நோயாளர்களுக்கான நான்கு மாதகால உதவிப் பணம் வழங்கப்படாததால்சம்பந்தப்பட்டவர்கள் இப்பணத்தை பெற தினமும் அலைந்து திரிகின்றனர்.

இறுதியாக ஆனி மாதம் வரையிலான மாதாந்த உதவிப் பணம் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி மாதங்களுக்குரிய இப்பணம் வழங்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆடி, ஆவணி புரட்டாதி மாதகால உதவிப் பணம் யாழ். கச்சேரியில் சமூக சேவைப் பிரிவில் தயாராக இருந்தும் அதனை எடுத்து வந்து வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

இவ் உதவிப் பணம் முன்னர் சமூக சேவை உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட போது வீடுகளில் இருந்து கொண்டே பெறமுடிந்ததாகவும் சம்பந்தப்பட்ட நோயாளிகள் தெரிவித்தனர். (82)

## மாவீரர் நாள் ஏற்பாடு

(வவுனியா)

மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியா ஈச்சங்குளம் பகுதியில்மாபெரும்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற உள்ளது.

ஈச்சங்குளம் சிறி முருகன் விளையாட்டுக் கழகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. எதிர்வரும் 15 ஆம் திகதி நான்கு பேர் கொண்ட ஒருநாள் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியே நடாத்தப்பட உள்ளது. (தி)

36 இளைஞர்களிடம் பெருந் தொகைப் பணத்தை வசூலித்தது தொடர்பாக பாகிஸ்

## கல்லுண்டாயில் பனை நடுகை

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்லுண்டாய்வெளிப் பகுதியில் பனைவிதை நடுகைத் திட்டப்பணியை மேற்கொள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினர் மானிப்பாய்தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தினூடாக கல்லுண்டாய் வெளியில் 2000 பனை விதை நாட்டும் பணியை 29- 10- 92 அன்று மேற்கொண்டனர்.

மேற்படி நிகழ்ச்சியில் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினர், மானிப்பாய் தெ. ப பொ உற்பத்தி கூட்டுறவுச்சங்கத்தினர், கிராமிய உற்பத்திக்குழுவினர் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## பாலர் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது

(பருத்தித்துறை)

யாழ் மாவட்டத்தில் சன சமூக நிலையங்களினால் நடாத்தப்பட்டு வரும் பாலர் பாடசாலைகளுக்கு கற்பிக்கும் உபகரணங்கள் யாழ் உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலால மேற்கொண்டுள்ளார். பாலர் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இக் கற்பிக்கும் உபகரணங்கள் உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

இவ் மோசடி பற்றி விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன

## கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் 'ஆங்கில மொழிப் போதனை' எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று, யாழ். பல்கலைக்கழக ஆங்கில மன்ற ஆதரவில் நாளை புதன் கிழமை (11-11-92) மாலை 3 00 மணியளவில் புவியியல் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

திருவாளர்கள், கே. கே. சோமசுந்தரம், சோ.பத்மநாதன், இ. தியாகராஜா, எஸ். தெய்வதவபாலன் ஆகிய கல்வியியலாளர்கள் உரையாற்றும் இக் கருத்தரங்கில் சகல ஆங்கில ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மருத்துவமாணவர் பொதுக்கூட்டம்

சகல மருத்துவபீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பி ப 4.30 மணிக்கு மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ளது

முக்கிய விடயங்கள் ஆராய படவிருப்பதால் அனைத்து மருத்துவபீட மாணவர்களையும்கலந்து கொள்ளுமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பயிற்சி வகுப்பு

வலிகாமம் வடக்குப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தில் இருபாலாருக்குமான தொண்டர் பயிற்சி வகுப்புக்கள்எதிர்வரும் ஞாயிறன்று பிற்பகல் நான்கு மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. எனவே சேர விரும்பும் தொண்டர்கள் வலி. வடக்குப் பிரிவுசெஞ்சிலுவைச்சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

... அமைப்பாளர்களை நியமிக்கவில்லை இந்நிலையில் எந்த நியமனங்கள் தனது அங்கீகாரமின்றி வழங்கப்பட்டது என்று திருமதி மல்லிகா கூறுகின்றார் என்பது தெரியாத புதிராக உள்ளது. என்றும் தெரிவித்தார். மேலும் இத்தகைய விடயத்திற்காக காமினி திசாநாயக்கா மற்றும் பிரேமச்சந்திரா போன்றோரைக் குறை கூறாமல் தன்மீது ... மல்லிகா கட்சியை விட்டு வெளியேறியமையோ தனது கட்சியைப் பாதிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

ரொனி டி. மெல் நிதி அமைச்சராகினால் ஒரு பொம்மை போலச் செயற்படுவார் என்றும், இவரை போன்ற ஏமாளிகளே இப்போது ஐ. தே. க. விற்குத் தேவைப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## நினைவு கூருகின்றோம் ...

## 1992-11-10

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - நொச்சிமுனைப்பகுதியில சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் கரன்** (ஆறுமுகம் கணேசராசா - கல்லடி - மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு புதுக்குடியிருப்புப் பகுதியில், எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சுரேஸ்சுரேன்** (வினாசித்தம்பி சந்திர மோகன் - 1-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு )

அச்சுவேலி, கோப்பாய், அராலிப் பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கணவன், மனைவி உட்பட 4- தமிழர்கள்.

1990 ம் ஆண்டு தமிழீழக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

**சுப்பிரமணியம் தியாகராசா** (புங்குடுதீவு)

மட்டக்களப்பில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மட்டு-வந்தாறு மூலையைச் சேர்ந்த இளைஞன்

1991-ம் ஆண்டு களுவங்கேணியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு- களுவங்கேணிக்கும் வந்தாறு மூலைக்குமிடையே உள்ள காட்டுப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு பிணமாக மீட்கப்பட்ட வயோதிபர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5382)

**சிந்தனைக்கு**

மகத்தான அரசியல் பிரச்சினைகள் நாட்டின் ஒருபாதி மக்களின் ஆழ்ந்த உணர்வுகளைக் கிளறுகின்றன. ஆனால் மறுபாதி மக்கள் தலைக்குமேல் இப்பிரச்சினைகள் எட்டச் சென்று விடுகின்றன.

— வெண்டெல்ஃபிலிப்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 10-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## அரசியல் தீர்வில் அரசிற்கு இஸ்டமில்லை

தீர்வுத் திட்டம் எதுவுமின்றி வடபகுதிக்குச் செல்வதில் எந்தவித பயனும் ஏற்பட்டு விடப் போவதில்லை எனப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா தெரிவித்துள்ளார். மேலும், அவர் இனப்பிரச்சினையின் உண்மை நிலையை சகலரும் நன்கு தெரிந்து கொண்ட போதிலும் இதுவரை அதனைத் தீர்ப்பதற்கு எந்த ஒரு நல்ல தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்க அரசோ அன்றி எதிர்க்கட்சிகளோ முன்வரவில்லை எனவும் தெரிவித்தார்.

திரு. மங்களமுனசிங்கா கடந்த வருடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் கொண்டு வந்த தனிநபர் பிரேரணையைப் பற்றிப் பிடித்துக் கொண்ட பிரேமதாசா அரசாங்கம் மங்களமுனசிங்காவின் தலைமையிலேயே ஒரு தெரிவுக் குழுவையும் நியமித்தது அதேவேளை தெரிவுக் குழுவில் பெரும்பான்மையினராக ஐ.தே. கட்சி எம். பி களையும் நியமித்தது.

ஆனால், கடந்த பதினைந்து மாதங்களுக்கு மேலாகச் செயற்பட்டுவரும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் பலர் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைத்த போதும், அரசாங்கக் கட்சியோ அன்றி பிரதான எதிர்க்கட்சியோ தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. அதைத் தட்டிக் கழிப்பதிலேயே அவை அக்கறையாக உள்ளதாகவும் தெரிகின்றது.

அத்தோடு, ஏனைய அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள் எதையும் அரசாங்கக் கட்சியோ அன்றி பிரதான எதிர்க்கட்சியோ ஏற்றுக்கொள்ளவுமில்லை. அதாவது தாமும் தீர்வுத் திட்டத்தை முன் வைக்காது பிறர் முன்வைத்த தீர்வுத் திட்டத்தையும் அங்கீகரிக்காத ஒரு முட்டுக்கட்டைப் போக்கையே அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் கடைப்பிடித்து வருகின்றன.

# மடு அகதிமுகாம்: அடிப்படை வசதியின்றி மக்கள் அவதி;

# நீரில்லா கிணற்றில் தொங்கும் வாளிகள் பல

இராணுவ அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து தற்போது மடுவில் அகதிகளாக தங்கியிருக்கும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவர்கள் நீண்ட காலமாக இம்முகாம்களில் தங்கி இருப்பதினால் சுமார் 70-80 வீதத்தினர் அடிப்படை வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். பிள்ளைகளை இழந்த பெற்றோரும், பெற்றோரை இழந்த பிள்ளைகளும், கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்துள்ள கணவனும், தமது உறவினர்களைப் பிரிந்து வீடு வாசல் சொத்து அனைத்தையும் இழந்த நிலையில் ஓர் ஓலைக்குடிலில் முடங்கி இருப்பதென்றால் அவர்களது அடிப்படை எவ்வாறு இருக்கும் என்பதை உணரலாம்.

அதாவது 19 கிராம சேவகர் பிரிவை சேர்ந்த சுமார் 8768 குடும்பங்களின் (சுமார் ε4,131 நபர்) இந்த அகதிகள் முகாமில் இருக்கின்றனர் இவர்களும் அடிக்கடி இடம் பெயர்வதினால் சரியான தகவல்களை பெற முடியவில்லை.

இங்கு அநேகர் தொழில் வாய்ப்பை இழந்த நிலையில் நிவாரண உணவில் மட்டும் தனது வாழ்க்கையை நடத்த வேண்டி உள்ளது. நிவாரணம் வழங்கப்படும் தொகையினர் ஒரு வேளை பசியைத் தீர்க்க முடியுமே அன்றி சத்துள்ள உணவுகளை உண்ண முடியாது உயிரைச் சில காலத்திற்குப் பிடித்து வைத்திருக்கவே இது உதவும்

மக்கள் இங்கு நெருக்கமாக இரண்டு, மூன்று ஆண்டு காலமாக வாழ்வதினால் பல்வேறு சமூக பிரச்சினைகள் உருவெடுத்துள்ளது. அங்கு உள்ள பலருடன் நாம் உரையாடும்போது தமது எதிர் காலத்தைப் பற்றிக் கேள்வி எழுப்புபவர்களாகவே உள்ளனர்.

அநேகரிடம் ஏழ்மை தாண்டவம் ஆடுவதைக் காணக்கூடியதாக இருந்தது. வீடுகள் பல வசதி குறைவானதாகக் டில் பல அங்கத்தவர்கள் இருப்பதால் சன நெரிசல் காணப்படுகிறது. அடிப்படை சுகாதாரவசதிகள் மிகக் குறைவாக காணப்படுகின்றன. இதற்கு சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட தொழிலாளர் தங்களால் இயன்றளவு சுகாதாரத்தைபேண முற்பட்டாலும், அங்குள்ளவர்கள் கண்டகண்ட இடங்களில் மலசலம் கழிப்பதாலும், குப்பை கூழங்களை அதனை இடவேண்டிய இடத்தில் இடாமையாலும், கழிவு நீரை வீதியில் ஊற்றி விடுவதாலும் எச்சில், சளி போன்றவற்றை கண்ட இடத்திலும் துப்புவதாலும் அங்கு சுற்றுப்புறம் மாசடைந்து காணப்படுகின்றது இதனை இவர்கள் உணர்வதாக தெரியவில்லை.

மலசல கூடங்களை பொறுத்தமட்டில் அனேகமான கூடங்களின் குழிகள் நிரப்பி உள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட மலசல கூடத்தில் அதிக எண்ணிக்கையாளர்கள் பாவிக்கும்போது இப்படியான நிகழ்வுகள் உருவாகும். எனவே இதற்கு மாற்றீடாக எதையாவது செய்ய வேண்டும். சிலர் அண்மையில் இருக்கும் காடுகளில் மலசலம் கழிக்கிறார்கள். இதனால் ஈக்களின் பெருக்கம் அதிகரிக்கிறது. சூழல் மாசடைகின்றது நோய்கள் விரைவாக பரவக்கூடியதாக அமைகின்றது இங்குள்ள பிள்ளைகளில் சுமார் இருபதுவீதமானவர்களுக்கு வயிற்றோட்டமும் 15-18 இடைப்பட்ட வீதத்தினருக்கு மலேரியா நோயும் காணப்படுகின்றது.

எல்லா பிரச்சினையை விட இங்கு விஷ்வரூபம் எடுத்துள்ள பிரச்சினை தண்ணீர். குடிநீர் என்றால் கஷ்டம் குளிக்க என்றால் அதை விட கஷ்டம் என்ற நிலைஉருவாகியுள்ளது அதிகாலை எழுந்தால் அனேகமானவர்கள் சைக்கிள் பின்புறத்தில் இரண்டு குடங்களை கட்டிக் கொண்டு தண்ணீர் எடுக்கச் செல்வார்கள் சுமார் ஒன்றரை மைலுக்கு அப்பால் சென்று தான் நீரை எடுத்து கொண்டு வர வேண்டும் அங்குள்ள கிணறுகளில் நீர் வற்றிச் சிறிதளவு நீரை பெறுவதற்கு கிணற்றினுள் தொங்கும் வாளிகள் ஏராளம்.

ஒரு நாளைக்கு ஒரு பௌசர் நீர் மட்டும் வழங்கப்படும். இதற்கு ஒரு நீண்ட வரிசை காணப்படும் சிலருக்கு கிடைக்கும் பலருக்கு கிடைக்காது மூன்று மைல் அப்பால் உள்ள தச்சனா மடு குளத்தில் தான் குளிக்க, சலவை செய்யச் செல்ல வேண்டும்.

இங்கு அதிக எண்ணிக்கையானோர் பாம்புக் கடிக்கு இலக்காகி வருகின்றனர். மருந்து பொருள்கள் பற்றாக் குறையாக காணப்படுகின்றது அத்துடன் குழந்தை பிரசவிக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கு ஆரோக்கியமான உணவுவகை

**ம- நிமால்**

களையும், ஆலோசனையும் வழங்க முடியாது உள்ளது பிறக்கும் குழந்தைகளின் சுமார் 20 /. நிறை குறைந்தவர்கள் மற்றும் ஆரோக்கியம் குறைவு என்பவற்றுடன் காணப்படுகின்றனர் 5 /. குழந்தைகள் இறந்து விடுகின்றனர் அவசர நோயாளிகளை அனுராத புரத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் இவர்களுக்கு உதவிக்கு ஒருவரை அழைத்துச் செல்வது என்றால் மொழி, பொருளாதார பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கல்வியை பொறுத்தமட்டில் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் அனேகம் இத்தனைக்கும் மத்தியில் அந்த மாணவர்கள் போடும் எதிர் நீச்சல் உண்மையில் ஒருசவால் ஆக அமைந்துள்ளது அதற்கு உறுதுணையாக ஆசிரியர்கள், அதிபர் சேவைகள் பாராட்டத்தக்கது.

இந்த பாடசாலையின் பெயர் ''திறந்த நிவாரண நிலைய பாடசாலை'' இதில் மொத்தம் 20 பாடசாலையை கள் 60 பிரிவுகளாக கல்வி பயில்கின்றார்கள் 62 ஆசிரியர்களும், வசதி கட்டண ஆசிரிய 13 பேரும் கடமையாற்றுகின்றார்கள்.

இத்தனை தொகையான மாணவர் பயிலும் இடத்தும் ஒரு நிலையான கட்டடம் இல்லை. சுமார் 200பேர் கல்வி பயில கூடிய ஒரு தற்காலிக நிலையம் மட்டும் உள்ளது. மழை பெய்தால் பிள்ளைகள் தமது வீடு செல்ல வேண்டியது தான். மரநிழலின் கீழே அமர்ந்து பிள்ளைகள் தமது பாடங்களை பயில வேண்டிய துர்ப்பாக்கியநிலை. புத்தகங்களை கொண்டு செல்லும் பிள்ளைகள் மறக்காது தாம் நிலத்தில் இருப்பதற்கு ஒரு பேப்பர் துண்டை கொண்டு செல்ல வேண்டும். சில மரநிழலில் அமர்ந்திருக்கும் ஆசிரியர் கதிரை இருக்கும். சிலருக்கு அதுவும் கிடையாது. அவர்கள் மரத்தின் வேரில் அமர்ந்து கற்பிப்பதைக்காணக் கூடியதாக இருந்தது

அனேக மாணவர்கள் சீர் உடை இல்லாமலும், பாடசாலை உபகரணங்கள் அற்ற நிலையிலும் காணப்படுகின்றனர். சில மரங்களின் கீழே மாணவரும் அதற்கு அருகாமையில் மாடுகளும் இருக்கும் என்றால் அந்த மாணவரின் நிலையைப் பார்த்தால் பரிதாபம் தான்.

அனேகமாகஎல்லாவகுப்பறையில் கரும்பலகை காணப்பட்டபோதும் வெண்கட்டி இல்லை மன்னார் கல்வி திணைக்களம் வெண்கட்டி வழங்கியபோதும் இராணுவம் அதனை எடுத்து வர அனுமதி தரவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்

இத்தனை இன்னல் மத்தியில் அந்த மாணவர்கள் போடும் எதிர் நீச்சல் எவ்வளவு தாற்பரியமானது அத்துடன் வீடுகளிலும் படிப்பதற்கு வசதியில்லை. அவர்களின்வீட்டில் வசதி இருந்தாலும் அடுத்த வீட்டுகாரர் குடித்து விட்டு சண்டை போடுவது போன்ற பிரச்சினைகளால் மாணவர் கல்வி பெரிதும்

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மிகுந்த உறுதுணையாக உள்ளார்கள். அற்ப சொற்ப சலுகைக்கும், பணத்துக்கும் ''டியூசன் என்று இல்லாது மாலை நேர வகுப்புக்களை வைத்து பிள்ளைகளுக்கு தங்களால் இயன்ற கல்வி வசதியை செய்து கொடுக்கின்றார்கள் உண்மையில் மிகுந்த அக்கறையுடன் மாணவர்களுக்கு ஒத்தாசையாக உள்ளார்கள். ஆசிரியர்களின் சம்பளப் பணம் காசோலையாக வழங்கப்படுவதால் அதனை மாற்ற 5% - 10% வரை கழிவு கொடுத்து மாற்றவேண்டும். அதுவும் பணம் பகுதி பகுதியாக தான் கிடைக்கும்.

அதிபர் பணிமனை இது ஒரு திறந்த வெளி - அதில் ஒரு மேசை, கதிரை மட்டும் தான். காற்று வீசினால் அங்குள்ள ஆசனங்கள் அனைத்தும் பறந்துவிடும். அந் நிலையில்இங்கு கடமையாற்றும் அதிபரின் பெயர் திரு. பா. பிரான்ஞ்சிஸ் சேவியர் மிகவும் கடமை உணர்வு கொண்டவர் இங்கு பிள்ளைகளை சேர்க்கும்போது எந்தவித ஆவணமும் இன்றி வாய்ச்சொல் ஒன்றே தான். பிள்ளைகள் இங்கு இருந்து விலகும்போது அவரின் முத்திரையின் கீழ் ஒரு கொப்பி ஒற்றையில் தகவல்களை எழுதி ஓர் ஒப்பம் அவ்வளவு தான் இந்த பாடசாலைக்கான இராணுவ கெடு பிடி எப்படி என்று பார்க்க வேண்டியதுதான்.

மிக மிக சிரமத்தின் மத்தியில் இந்த திறந்த நிவாரண நிலைய பாடசாலை செயற்படுகின்றது. இந்தமாணவர்களுக்கு கொப்பி, எழுதுகருவிகள், ஏனைய புத்தகங்கள், சீர் உடைகளை சமூக நலன் விரும்பிகளும், சமூக நலன் விரும்பும் நிறுவனமும் வழங்குவதன் மூலம் இவர்கள் பெரும் எதிர் நீச்சலுக்கும் நாம் உதவ

எதிர்க்கட்சிகளும் கடைப்பிடித்து வருகின்றன.

இந்நிலையில், திரு மங்களமுனசிங்காவின் அறிவிப்பானது ஏற்புடையதொன்றே. நித்திரை கொள்பவனை எழுப்பலாம் ஆனால், நித்திரை கொள்வதைப்போல் நடிப்பவனை எழுப்ப முடியாது என்பது போல், அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் இனப்பிரச்சினையை நன்கு உணர்ந்துள்ளார்கள். இதன்காரணமாக பிரச்சினைக்குரிய தீர்வையும் அவர்கள் இலகுவாகக் கண்டு பிடித்துவிட முடியும். ஆனால், அவை அதற்குத் தயாராக இல்லை.

இதேவேளை, தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவான சக்திகள் கட்சிக்குள் உருவாவதற்குப் பதில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பதற்கான பலமான சக்திகளே உருவாகின. இச் சக்திகளின் உருவாக்கம் எதிர்க்கட்சிகளோ அன்றி அரசாங்கக் கட்சியோ தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண விட்டுக் கொடுப்புக்கள் செய்யுமாயின் அக்கட்சிகளையே உடைத்து விடப்போவதாக மிரட்டும் நிலையில் உள்ளன.

இந் நிலையில், திரு. மங்களமுனசிங்கா குறிப்பிடுவது போன்று அரசாங்கத்தினதும், எதிர்க்கட்சிகளினதும் அங்கீகாரம் பெற்ற தீர்வுத்திட்டம் ஒன்று இல்லாமல் வடபகுதிக்குச் சென்று விடுதலைப்புலிகளையும் சந்தித்துப் பேசுவதினால் லாபம் ஒன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. இது தனியாக திரு. மங்கள முனசிங்கா கொண்டுள்ள கருத்தாக வெளிப்படுத்தப்பட்டிருப்பினும், பொதுவாகத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சமாதான முயற்சிகளில் ஈடுபடும் சகல தரப்பினருக்குமான ஓர் அறிவுறுத்தல் என்று கூறுவதும் பொருந்தும்.

அதேவேளை, திரு. மங்களமுனசிங்கா இனப் பிரச்சினை தீர்விற்கென முன்வைத்துள்ள திட்டங்களை நோக்கும்போது அது தமிழரின் அபிலாசைகளைத் தீர்த்து வைக்கப் போதுமானதாக இல்லை. அதாவது இனப்பிரச்சினைத் தீர்விற்கு அரசாங்க, எதிர்க்கட்சிகளை மட்டும் திருப்திப்படுத்தும் தீர்வுத் திட்டங்கள் மட்டும் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது அவை தமிழ்மக்களையும், விடுதலைப் புலிகளையும் திருப்திப் படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும். இதனையும் திரு. மங்களமுனசிங்காவும் சமாதான முயற்சியில் ஈடுபட முற்படுபவர்களும்கருத்திற்கொள்வது அவசியமானதாகும்.

---

பல வசதி குறைவானதாகக் காணப்பட்டன. ஒரு வீட்

குள்ள கிணறுகளில்நீர் வற்றிக் காணப்படுகிறது அதில் உள்ள

மொத்தம் 20 பாடசாலையை சேர்ந்த சுமார் 4218 மாணவர்

மாணவர் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

நீச்சலுக்கும் நாம் உதவ முடியும்

---

## ஆசியநாட்டு மாலுமிகள் கப்பல்களில் இம்சை

இலங்கையர்கள் உட்பட ஆசிய நாட்டைச் சேர்ந்த மாலுமிகள் மேற்கு நாட்டுக் கப்பல் கம்பனிச் சொந்தக்காரர்களினால் இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுவதாக அவுஸ்திரேலிய எம்.பி. பீட்டர்மொறிஸ குற்றம் சாட்டியுள்ளார்.

ஆசியநாட்டு மாலுமிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் கப்பல்களில் ஆசிய நாட்டு மாலுமிகள் உணவு கொடுக்கப்படாது பட்டினி போடப்படுவதாகவும் பாலியல் தொடர்பாக கேவலப்படுத்தப்பட்டு அவமரியாதைக்கு உட்படுத்தப்படுவதாக பீட்டர் மொறிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

பாதுகாப்பற்ற லைட்டர் தயாரித்தோருக்கு

## 22 மில்லியன் டாலர் நஷ்டஈடு செலுத்த உத்தரவு

நன்கு பாதுகாக்கப்படாத சிகரட் லைட்டர்களைத் தயாரித்தமைக்காக இருபத்திரண்டு மில்லியன்டாலர் நட்டஈடு செலுத்தும்படி ஒரு கம்பனிக்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

இக் குறிப்பிட்ட சிகரட் லைட்டர்கள் பாவனையில் இருந்த போது மூன்று குழந்தைகள் தீக்காயங்களுக்கு இலக்காவதற்கு காரணமாக இருந்தன என்றும், குழந்தைகள் சார்பில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டினை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் 22 மில்லியன் டாலர் நட்டஈடு வழங்கும்படி உத்தரவிட்டது

## காஷ்மீர் அணுகுமுறையால் பாக். பொருளாதாரம் நலிவு

(டில்லி)

காஷ்மீர் விடயத்தில் இந்திய நாட்டுடன் எதிர்ப்பு கொள்கை ஒன்றை பராமரிப்பது என்ற பாகிஸ்தானில் எடுத்த முடிவின் காரணமாகத்தான் பாகிஸ்தானின் நிதிவள வசதிகளில் பெரும்பங்கு வழக்கத்திற்கும் அதிகமாக பெரும் எடுப்பிலமைந்த இராணுவ நிறுவனம் ஒன்றை பராமரிப்பதற்கு செலவிடப்படுகிறது.

பாகிஸ்தானில் உள்ள பிரபல பத்திரிகை கட்டுரையாளரான திரு எம்.வி நக்வி ஆங்கில தினசரி புரொன்ரியர் போஸ்டில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளகட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கட்டுரையில் மேலும் காஷ்மீர் பிரச்சினை பற்றி தீவிரமாக மறுபரிசீலனைசெய்திடுமாறும் பாகிஸ்தான் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள அவர் இதுபாகிஸ்தான் நாட்டு பொருளாதாரத்தை நாசப்படுத்தியுள்ளதாகவும் ஐ நா. தீர்மானங்கள் இனியும் பொருந்தத்தக்கவையாக அமையவில்லை ஆதலால் இது பற்றிய பேச்சுக்கள் அனைத்தும் கைவிடப்படவேண்டும் எனவும் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டவருக்கு எதிரான

## வன்செயலைக் கண்டித்து ஜேர்மனியில் ஆர்ப்பாட்டங்கள்

ஜேர்மனியில்வெளிநாட்டவர்களுக்குஎதிராககாட்டப்படும் பகைமை உணர்வு இனவேறுபாட்டு வன்செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் பெர்லின் வீதிகளில் ஆயிரக்கணக்கான ஜேர்மனியர்கள் மாபெரும் இனவாத எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்

ஜேர்மன் பிரதம மந்திரி ஹெல்மட்ஹோல் அதிபர் றிச்சர்ட் வைஸ்சார்க் உட்பட பிரபல அரசியல் வாதிகள் பலர் இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பெர்லின் முழுவதிலும் பல ஆலயங்களில் ஜேர்மனியர்களைச் சகிப்புத் தன்மையை கடைப்பிடிக்கக் கோரி பிரார்த்தனைகள் நடாத்தப்பட்டன.

ஒன்றிணைந்த ஜேர்மனியின் தலைநகரில் நடைபெறும் இவ் ஊர்வலத்தில் சுமார் ஒருஇலட்சம் பேர் இணைந்து கொள்வர் எனவும், ஜேர்மனின் 16 மாநிலங்களின் பிரதமர்களும் கலாசார வர்த்தக பிரமுகர்களும் இவ் ஊர்வலத்தில் இணைந்து கொள்வர் என ஊர்வல அமைப்பாளர்கள் தெரிவித்திருந்தனர்.

கம்போடிய விவகாரம்

## பீக்கிங் பேச்சு வார்த்தையில் முன்னேற்றமில்லை

(பீக்கிங்)

கம்போடிய பற்றி பீக்கிங்கில் நடைபெற்ற இரண்டு நாள் பேச்சுவார்தைகள் எந்த வித உடன்பாடும் எட்டப்படாமலேயே முடிவுக்கு வந்துள்ளது. நான்கு போட்டிக் குழுக்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் பீக்கிங்கில் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர். ஆனால் கம்போடியாவில் வியட்நாம் துருப்புக்கள் தொடர்ந்து அங்கு நிலை கொண்டிருப்பதாகக்கூறி ஆயுதக் களைவுக்கு இணங்க அவர்கள் மறுப்பு தெரிவித்து விட்டனர்.

கம்போடியாவின் நான்கு போட்டிக் குழுக்களுடன்ஐ நா. மற்றும் பிரான்ஸ், இந்தோனேசியா, சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

கெமரூச் குழுவினர் அமைதி முயற்சியில்மீண்டும் இணைந்து கொள்வதற்கு இன்னும் ஒரு வாரம் மட்டுமே இருக்கின்ற சூழ்நிலையில், பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தோல்வியானது பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைத்து அடுத்த ஏப்ரலில் நடைபெறுவதற்கென நிச்சயிக்கப்பட்ட தேர்தல்களையும் கேள்விக்குரிய தாக்கியுள்ளது.

## இலங்கைத் தமிழர் 14 பேர் மீது வழக்கு

தமிழ் நாட்டிற்குள் தீவிரவாத நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக தமிழ் நாட்டிற்குள் வெடி மருந்துகளை களவாக கொண்டு செல்ல முற்பட்டதாக தடா சட்டத்தின் கீழ் 14 இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக கடந்த வியாழனன்று சென்னை நீதி மன்றத்தில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ஈழநாதம்

## பஸ் விபத்தில் 8 பேர் பலி

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ரம்பொடவில் பஸ் வண்டியொன்று பள்ளத்தில் விழுந்ததினால் எட்டு பிரயாணிகள் கொல்லப்பட்டார்கள் 30 பேர் காயமடைந்தார்கள் என சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# கிளிங்டனுடன் ஒத்துழைக்க ஈராக் தயாராகவுள்ளது

### -தகவல் தொடர்பு அமைச்சர் தெரிவிப்பு

(பாக்தாத்)

அமெரிக்க புதிய ஜனாதிபதி திரு. கிளிங்டனுடன் ஒத்துழைக்கவும் அமெரிக்க ஈராக் உறவில் புதிய சகாப்தம் காணவும் தாம் தயார் என ஈராக் முதல் தடவையாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள திரு. கிளிங்டனுடன் பேச்சுவார்த்தை நடாத்த தயார் என்றும் ஜோர்ஜ்புஷ் தனிப்பட்ட முறையில் ஈராக் ஜனாதிபதி சதாம் உசைனை பழிக்குப்பழி வாங்கும் நோக்குடன் செயற்பட்டார் எனவும் அமெரிக்காவின் நலன்களைக் குலைப்பது ஈராக்கின் நோக்கமல்ல எனவும் ஈராக்கின் தகவல் தொடர்பு துறை அமைச்சர் கூறினார். அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக வரவுள்ள பில் கிளிங்டன் ஈராக்குடன் உடனடி உறவு கொள்ள முன்வருவார் என்பது சந்தேகமே என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்ந்து அமுல்

பிலிப்பைன்ஸ்நாடு பிறநாடு ஒன்றினால் தாக்கப்பட்டால் அமெரிக்கா உடனடியாக பிலிப்பைன்ஸிற்கு பாதுகாப்பாக களத்தில் இறங்கும் என அமெரிக்கா பிலிப்பைன்ஸ் உடன் 1959 இல் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படும் என அமெரிக்க வெளியுறவு குழுவின் தலைவர் பிலிப்பைன்ஸ் பாராளுமன்றத்தின் முக்கியஅங்கமான செனற்றில் தெரிவித்துள்ளார்.

எண்ணெய் வளம் கொண்ட பிரான்சிஸ் தீவின் பிரச்சினையில் அமெரிக்கா பிலிப்பைன்சை ஆதரிக்காமல் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம்தீர்க்க வலியுறுத்துவதன் மூலம் அமெரிக்கா தனது முன்னைய ஒப்பந்தத்தை மீறுவதாக பிலிப்பைன்ஸ் குற்றம் சாட்டியுள்ளது

## நிவாரணம் நிறுத்தம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதி மீனவக் குடும்பங்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக மீனவர்நிவாரணம்நிறுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கு கடந்த ஆனி மாதம் வரையுமே நிவாரணம் வழங்கப்பட்டன. மீனவர்நிவாரணம் நிறுத்தப்பட்டதினால் சுமார் பத்தாயிரம் குடும்பங்கள் தமது அன்றாட வாழ்க்கையை ஓட்ட முடியாமல் அவல நிலையையடைந்துள்ளனர்.

கடலில் கடற்படையினரின் அட்டகாசங்களாலும், மீனவ உபகரணங்கள் அழிக்கப்பட்டு வருவதினாலும் சுய தொழிலைக் கூட செய்ய முடியாத அவல நிலையில்' இருக்கும் மேற்படி குடும்பங்களுக்கு மீனவர் நிவாரணம் நிறுத்தப்பட்டிருப்பதினால் இக் குடும்பங்கள் கஷ்ட நிலையில் மூழ்கி வருகின்றனர். (யோ)

# இராணுவ கட்டாய சேவை காலம்; 10 ஆண்டுகளாக குறைக்குக

### -ஆனந்த தசநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

ஆயுதப்படையினர் ஓய்வு பெறுவதற்கு முன்பு கட்டாய சேவையாற்றவேண்டிய காலப் பகுதியை இருபதுஆண்டுகளிலிருந்துபத்துஅல்லது பதினைந்து ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் எனவும், ஆயுதப் படையினரை வெறும் சொற்களால் புகழ்வதுமட்டும் போதாது எனவும். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நுவரெலியா மாவட்ட எம். பி.யான ஆனந்த தசநாயக்கா பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும், சிறிலங்கா கடற்படையினர் மூன்று அல்லது நான்கு கடற்படைக் கப்பல்களை மட்டுமே கொண்டிருக்கின்றனர். இது போதாது மேலும் பல கப்பல்களை வாங்கி இந்து சமுத்திரத்தில் ஈடுபடுத்த வேண்டும். இதுஅவசியமானது. இதற்காக கடன்களை பெறவேண்டும். கடலில் நாம் பலம் பொருந்தியவர்களாக விளங்கி விநியோக வழிகளைத் தடுக்காது விட்டால் இந்தப் போரில் நாம் வெல்ல முடியாது. என்றும் குறிப்பிட்டார்.

## எல்லைப்புற கிராமவாசிகள் ஆயுதபயிற்சி பெறவேண்டும்

### எம். எச். அமீத்

எல்லைப்புறங்களில் இருக்கும் கிராமவாசிகள் தமது கிராமங்களைப் பாதுகாப்பதற்கும், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இராணுவப் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஐ. தே. க. தேசிய பட்டியல் மூலம் உறுப்பினரான எம். எச். அமீத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் தலாநூறு இராணுத்தினர் வீதம் அமர்த்தப்படுவதெனில் 103 எல்லைக் கிராமங்களுக்கு மட்டும் பத்தாயிரத்துக்கு அதிகமான இராணுவத்தினர் தேவைப்படுவர். இது சாத்தியமானதல்ல என்பதால் கிராமவாசிகள் தமது பாதுகாப்பிற்காக பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

புத்தளத்திலுள்ள

## சீமெந்து தொழிற்சாலை மக்கள் மயமாக்க முயற்சி

(கொழும்பு)

புத்தளம் சீமெந்து தொழிற்சாலையை மக்கள் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனினும் தொழிலாளர்கள் எவரும் ஓய்வு பெறும்படி நிர்ப்பந்திக்கப்படவில்லை என்றும், ஓய்வு பெற விரும்புபவர்களுக்கு மட்டும் அவ்வாறான வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகின்றது என்றும் துணை அமைச்சர் சந்திராரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சி. வி. குணரத்னாவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் மேலும் கூறியதாவது; நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மக்கள் மயமாக்குவது என்ற அரசின் கொள்கையின் அடிப்படையிலேயே இது செய்யப்படுவதாகவும், புல்முல்ல குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

## கொழும்பு - பருத்தித்துறை கப்பல் சேவை ஆரம்பம்

[கொழும்பு]

கொழும்பில் இருந்து பருத்தித்துறை வரை நேரடியான கடுகதி பயணிகள் கப்பல் சேவை மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இக்கப்பல் நூறு பயணிகளை ஏற்றிக் கொண்டு கொழும்பில் இருந்து சுமார் 12 மணி நேரத்தில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். இக்கப்பல் சுமார் 4 அடி ஆழமான கடற்கரைவரை பயணிகளுடன் வரக்கூடியது

இக்கப்பல் சேவைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து இறுதியாக எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னர் வெளியாகிய தகவலின்படி திருக்கோணமலைக்கும் காங்கேசன்துறைக்குமிடையிலான சேவை நடைபெறமாட்டாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. (க) (ச)

போதைவஸ்து கடத்தல்

## இத்தாலி சிறைகளில் 659 இலங்கைத் தமிழர்

(யாழ்ப்பாணம்)

போதைவஸ்துக் கடத்தும் தொழிலில் ஈடுபட்ட சுமார் 659 இலங்கைத் தமிழர்கள் இத்தாலி நாட்டுப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் போதைவஸ்து கடத்திய குற்றம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் அந்த நாட்டுச் சட்டவிதிகளுக்கமைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

நேற்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கில் உரைநிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கா குகபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் 'சர்வதேச அரசியல் விவகாரங்களில் புவிசார் அரசியலின்முக்கியத்துவம்' என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை தலைவர் திருக பாலச்சந்திரன் உரைநிகழ்த்தினார் (க)

# படையினர் மனோதிடம் பாதிப்பு போக்க நடவடிக்கை வேண்டும்

### அம்பாறை மாவட்ட எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

இராணுவத்தினரின் மனோதிடம் மிகவும் பாதிக்கப்பட்டுப் போயுள்ளது இதனைப் போக்கும் வகையில் அவர்களுக்கு வசதியும் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என்று அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பியானதேவாரப்பெருமா பாராளுமன்றத்தில் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் கூறுகையில் வடக்கு கிழக்குப் போரை முடிவுக்கு கொண்டு வரக் கூடிய எந்த அம்சத்தையும் அண்மைய எதிர் காலத்தில் காணமுடியாது என்றும், இராணுவத்தினர் நன்கு பயிற்றுவிக்கப்படாமல் முன்னணி நிலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர் என்றும், ஊர்காவற்படையினரின் வேதனத்தை அதிகரிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில்வாழும்தமிழர்களில்

## 30 சதவீதமானோர் மனோவியல்ரீதியாகபாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இருந்து மேற்கைரோப்பியா மற்றும் இதர வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் பலர் மனோவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அங்கு வாழும் தமிழர்களில் 30 சதவிகிதமானவர்கள் இவ்வாறு மனோவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தூக்கமின்மை, தனிமை, போதைவஸ்துப் பாவனை மற்றும் வேலைப்பளு ஆகியவற்றினால் இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கில் உரைநிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு, கா.குகபாலன் தெரிவித்தார். (க)

# கோரிக்கை ஏற்காவிட்டால் பதவி விலகத் தயார்

### -பல்கலை விரிவுரையாளர் சம்மேளனம்

(கொழும்பு)

பல்கலைக் கழக விரிவுரை [illegible]

ளார்.

தமது சம்பளத்தினை 90 சதவீதத்தால் அதிகரிக்குமாறு [illegible]

வில்லை என்றும் விரிவுரையாளர்கள் பரீட்சை திணைக்களத்திற்கு க.பொ.த. சாதா [illegible]

# கனரக ஆயுதங்களையே பிரிட்டன் வழங்குமாம்

பல்கலைக் கழக விரிவுரை யாளர் சம்மேளனம் கோரியிருக்கும் சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் தயங்குமானால் பல்கலைக்கழகம் பரீட்சைத் திணைக்களம் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலும் உள்ள சகல தொடர்புகளிலுமிருந்து விலகிக் கொள்ள தாம் தயாராக இருப்பதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க செயலாளர் கலாநிதி நளின் த.சில்வா லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்துள்

தமது சம்பளத்துடன் 90 சதவீதத்தால் அதிகரிக்குமாறு தாம் கேட்டுள்ளதாகவும் ஏனைய விடயம் தொடர்பாக உயர்கல்வி அமைச்சருடன் சகல பல்கலைக்கழக பிரதி நிதிகளும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகவும் இது வரை அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட

...களத்திற்கு க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம்போன்ற பரீட்சைகளுக்கு பல விடயங்களில் உதவுவதாகவும் தமது இந்த திட்டத்தினால் பாதிக்கப்பட கூடும் என்றும் இது தொடர்பாக தாம் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறினார்.

...நடைபெறமாட்டாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. (க) (ச)

## பிடிபட்டார்

திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள கடையொன்றை உடைத்து திரு'—முயன்ற ஒருவர் அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்தவர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார். இச்சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளான கடைச் சொந்தக்காரர் ஒருவர் தலையில், காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3. 30 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் பிடிக்கப்பட்ட மேற்படி களவில் ஈடுபடமுயன்ற நபர் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார். (பா)(நி)

## மேற்கு

யிலான தமிழர்கள் அந்தநாட்டிலேயே குடியுரிமை பெற்றிருக்கின்றனர். நெதர்லாந்தில் சுமார் 35 000 தமிழர்களும், சுவிற்சலாந்தில் 23,409 தமிழர்களும் வாழ்கின்றனர். இவர்களில் 338 தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கின்றது. மிகுதியானவர்களுக்கு விரைவில் அகதி அந்தஸ்து வழங்கப்படவிருக்கிறது இத்தாலியில் சுமார் 5500 தமிழர்கள் உள்ளனர். இதை விட ஜேர்மனியில் 36,000 தமிழர்களும், பிரான்ஸ் நாட்டில் 40 000 தமிழர்களும், கனடாவில் 35,000 தமிழர்களும், அவுஸ்ரேலியாவில் 4500 தமிழர்களும், நோர்வேயில் 16 000 தமிழர்களும் வாழ்கின்றனர் என்றும் கூறினார். இவற்றைவிட 1986 ஆம் ஆண்டு ஒருலட்சத்து முப்பதாயிரம் தமிழர்களும், 1990 ஆம் ஆண்டு 60 000 தமிழர்களும் இந்தியாவிற்குச் சென்றிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது. இவர்கள் இவ்வாறு இடம் பெயர்வதால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன நிம்மதியற்றநிலை, கல்வி பாதிப்பு, பழக்கவழக்கங்கள் சீர்கெடுதல் போன்ற பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன என்றும் கூறப்பட்டது. (க)

# ஆரம்ப ஆசிரியருக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வவுனியா கல்வித் திணைக்களத்தில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தவறிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 33 அபேட்சகர்களுக்குமான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9. 00 மணிக்கு யாழ். கல்வித்திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

குறிப்பிட்ட அபேட்சகர்கள் தங்களது நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக் குழுவில் திருக்கோணமலை கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் அங்கம் வகிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீனவர்

ராதா, இ. தவராசா ஆகியோர் தமது மீன்பிடி உபகரணங்களையும் கைவிட்டு கடலில் குதித்து நான்கு மைல் தூரம் நீந்திக் கரைவந்து சேர்ந்துள்ளனர் இவர்கள் இருவரும் பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களாவர்.

இவர்களின் படகு, வலை, எஞ்சின் உட்பட 50 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களை கடற்படையினர் எடுத்துச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. (யோ)

திணைக்களங்கள் மூடப்பட்டதால்

# வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியருக்கு நிவாரணம்

(கொழும்பு)

அரச திணைக்களங்கள் மூடப்பட்டதன் காரணமாக சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திணைக்களங்கள் மூடப்பட்ட வேளையில் ஓய்வூதியம் பெறுவதற்குரிய பத்துவருடகால சேவையை பூர்த்தி செய்யாது இருந்தவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளதாக இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை சகல திணைக்களங்களுக்கும், அமைச்சுக்களுக்கும் பொது நிர்வாக மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

பத்து வருட சேவையை பூர்த்தி செய்வதற்குமுன்னால் வேலை நீக்கப்பட்ட ஊழியர்கள் பற்றிய விபரங்களை சார்க் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கும்படி அச்சுற்றறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஊழியர்களை பதிவுசெய்து தேவையேற்படும்போது இவ் ஊழியரை வேலைக்கு அமர்த்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கப்படும் வரை பத்து வருட கால சேவை பூர்த்தி செய்யும்வரை அவர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கு திறைசேரியில் இருந்து நிதி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது

## ஆலங்கேணி

அத்துடன் இப்பாதையினூடான பயணமும் தடைப்பட்டது இப்படகுகளிலிருந்து ஏவப்பட்ட பீரங்கி குண்டுகள் நல்லூர், ஆலங்கேணி தம்பிரான் பகுதிகளில் வீழ்ந்து வெடித்சதாக தெரியவருகிறது

இதேவேளை, நேற்றிரவும் இப்பகுதியில் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது

# பிரிட்டன் வழங்குமாம்

(லண்டன்)

சிறிலங்காவுறகான ஆயுத உதவிகளை பிரிட்டிஷ் தொடர்ந்து வழங்குவது சிறிலங்காவின் மனித உரிமைகள் விடயத்தில் தங்கியுள்ளது என பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரகத்தைச் சேர்ந்த இவ்வமைச்சர் மாக்ஸ் பேனக்ஸ் வொய்ட் தெரிவித்துள்ளார்.

ஒருவருடத்திற்கு முன் இலங்கையில் பிரிட்டிஷ் தூதுவராகக் கடமையாற்றிய டேவிட்கிளாஸ்ரன் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுகிறார் எனக் குற்றம்சாட்டி இலங்கை அரசு அவரை நாடுகடத்தியதை தொடர்ந்து பிரிட்டிஷ் இலங்கைக்கான தனது ஆயுத உதவிகளை நிறுத்தியது தெரிந்ததே.

தற்போது இத்தடையை நீக்கியுள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் அறிவித்துள்ளார். கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் உக்கிரமடைந்துள்ளதால் தாம் சிறிலங்கா இராணுவத்திற்கு தேவையான கனரக ஆயுதங்களை மட்டும் உடனடியாக வழங்கவுள்ளதாக அவ் அதிகாரி அறிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களைக் கருத்தில் கொண்டே தாம் கனரக ஆயுதங்களை மட்டும் இராணுவத்திற்கு வழங்கவுள்ளதாக அவ் அதிகாரி கூறினார் அவ் அதிகாரி பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் விடயங்கள் நன்கு அவதானிக்கப்படுவதாகவும் தொடர்ந்து ஆயுதம் வழங்குவது மனித உரிமைகள் விடயத்திலேயே தங்கியுள்ளது எனவும் கூறினார்.

தற்போது எறிகுண்டுகள், பீரங்கிக் குண்டுகள், வெடிமருந்துகள் போன்றவை வழங்கப்படமாட்டாது எனவும் மாறாக கனரக ஆயுதங்களான கவசவண்டிகள், விமானங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியனவையே வழங்கப்படும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்காவுக்கான ஆயுத உதவி நிறுத்தப்பட்ட வேளையிலும் இராணுவத்தினருக்கான இராணுவப் பயிற்சிகளை தாம் வழங்கிவந்ததாகவும் இது தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சிறிலங்கா ஒரு பல்லின நாடு அவுஸ். தூதுவர் கருத்து

(கொழும்பு)

சிறிலங்காவில் இருப்பவர்கள் அனைவரும் இன மத வேறுபாடுகளுக்கப்பால் ஒரு பல்லின நாடாக இதனைக் கருத்திற் கொண்டால் தான் இங்கு அமைதி ஏற்படுவது சாத்தியமானதாக இருக்கும் என்றுகொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் ஹேவார்ட்டே பென்கம் கூறியுள்ளார்.

கொழும்பு புனித பெனடிக்ட் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில், தற்போதைய முரண்பாடுகளில் இருந்து விடுபட்டு சிறிலங்கா மக்கள் அனைவரும் புதியதும் முன்னேற்றகரமானதுமான நட்பையும் இணைப்பையும் பெற்றுக் கொள்வதைகாண விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 09-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6581

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

26-8051, 42-3815, 24-2288, 24-5703, 24-4288, 26-536, 26-1019, 41-534, 26-5492, 41-9855, 26-3688, 42-4126, 42-2397, 27-2088, 42-1089, 26-5206, 27-9489, 27-9365, 24-4491.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-

28-0587, 24-5967, 27-6583, 41-8432, 27-1637, 24-5939, 41-5178 24-1172, 41-5015, 41-7109, 40-1188, 26-8878, 24-4992, 26-1658, 41-9038, 26-1495, 42-1320, 24-8603, 42-7975, 41-7563, 24-9744.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.